**திருச்செங்கோடு நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர்: திரு.ந.அருள்,எம்.எஸ்.சி.,**

**ந.க.எண்.959/2025/எப்1,** **நாள்: 05.06.2025**

பொருள் : நகரமைப்பு பிரிவு – திருச்செங்கோடு நகராட்சி – 48, கைலாசம்பாளையம் கிராமம், வார்டு–C, பிளாக் 16, நகரளவை எண்.20/3, 4.94 ஏக்கர் (அ) 20000.00 சதுர மீட்டர் பரப்பளவில் அமையப்பெற்ற குடியிருப்பு மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. உதவி இயக்குநர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் கடித ந.க.எண்.NKL/NZLDOV/49/37336/2025/TCP, நாள்.13.03.2025 Approval No/SWP /DTCP/ NAMAKKAL/ Layout No.61/2025.
2. மனுதாரரின் விண்ணப்ப நாள்.14.03.2025.
3. இந்நகர்மன்ற தீர்மான எண்.246, நாள்.30.04.2025.
4. ரங்கசாமி தொழில்நுட்பக் கல்லூரி, திருச்செங்கோடு நிறுவனத்தின் ஆய்வு அறிக்கை நாள்.28.05.2025.

***********

**உத்தரவு:–**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட, 48, கைலாசம்பாளையம் கிராமம், வார்டு–C, பிளாக் 16, நகரளவை எண்.20/3, 4.94 ஏக்கர் (அ) 20000.00 சதுர மீட்டர் பரப்பளவில் அமையப்பெற்ற 72 குடியிருப்பு மனைகளுக்கு பார்வை (1)–ல் கண்டுள்ளவாறு மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மனைப்பிரிவுதாரர் தான சாசன பத்திரம் எண்.1/2025–ன்படி மனைப்பிரிவு சாலை, பொது உபயோக இடம் ஆகியவற்றை பதிவு செய்து நகராட்சியில் ஒப்படைத்துள்ளார். மேற்கண்ட விபரத்தினை பார்வை (2)–ல் கண்ட மனைப்பிரிவுதாரரின் கடிதத்தில் தெரிவித்துள்ளார். ரங்கசாமி தொழில்நுட்பக் கல்லூரி, திருச்செங்கோடு நிறுவனத்தின் ஆய்வறிக்கையின்படி, நகர் ஊரமைப்பு துறை கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு அடிப்படை வசதிகள் செய்துள்ளதாக பார்வை (4)–ல் கண்டுள்ளவாறு ஆய்வறிக்கை அளித்துள்ளனர்.

எனவே, மேற்கண்ட மனைப்பிரிவுக்கு நாமக்கல் மாவட்ட நகர் ஊரமைப்பு துறையால் வழங்கப்பட்ட NKL/NZLDOV/49/37336/2025/TCP, நாள்.13.03.2025–ல் தெரிவித்துள்ள மனைப்பிரிவு நிபந்தனையின்படி, இறுதி ஒப்புதல் வழங்க பார்வை (3)–ல் காணும் இந்நகர்மன்ற தீர்மானத்தின் அனுமதி வழங்கியுள்ளது. அதன்படி இம்மனைப்பிரிவுக்கு மனைப்பிரிவு நிபந்தனைகளின்படி இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

ந.அருள் 5.6.25

ஆணையாளர்,
திருச்செங்கோடு நகராட்சி.

**பெறுநர் :**

M/s PSK அருண் ரியல் டெவலப்பர்ஸ் (P) Ltd.,
32/7, காமராஜ் நகர்,
பெரியகாடு, பள்ளிபாளையம்,
நாமக்கல் மாவட்டம்.

5.6.25

**நகல் :**

1. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், திருச்செங்கோடு.
2. மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்,
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வளாகம், நாமக்கல்.